(ix) உதகமண்டலத்தில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

திரு. ஏ. எம். ராஜா : சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" நீலகிரி மாவட்டத்தின் தலைநகரமான ஊட்டியில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் பெருத்த கஷ்டப்படுவதுமல்லாமல், கோடை வாசஸ்தலமாகிய இப்பகுதியில் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்து ஏராள மான பொது மக்கள் வந்து தங்குவதால், குடிதண்ணீர் வழங்கு வதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இப்பொருள் பற்றி மிக அக்கறையுடன் அரசு கவனம் செலுத்தி வருகிறது. உதகமண்டலத்தில் நீர் பற்றுக்குறை உள்ளது என்று அரசுக்குத் தெரிந்த உடனே பொதுச் சுகாதாரப் பொறியியல், மற்றும் நகராட்சிப் பணித்துறைத் தலைமைப் பொறியாளர் இதனை ஆய்ந்து அறிக்கையனுப்புமாறு பணிக்கப்பட்டார். அவர் பூர்வாங்க ஆய்வு நடத்தி சற்றேறக்குறைய 36 லட்சம் ரூபாய் செலவில் இரு பகுதி களாக முடிக்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தம் பரிந்துரையுடன் அனுப்பியுள்ளார். முதற் பகுதியின் செலவு சுமார் 30 லட்சம் ரூபாயாகும். சில நாட்களுக்கு முன் இங்கு வந்திருந்த நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருட்பட இதுபற்றி தொடர்புள்ள எல்லா அலுவலர்களுடன் நான் விரிவாக விவாதித்தேன். இத்திட்டத்திற் காகக் கொடுக்கப்படவிருக்கும் கடன் தொகையை அடைப்பது குறித்து உதகமண்டலம் நகராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இத்திட்டத்தை முறைப்படி நகராட்சி மன்றம் ஒப்புக்கொண்டு தனது பரிந்துரையுடன் அரசின் ஒப்பு தலுக்கு அனுப்பவேண்டுமென்பது இம்மன்றத்துக்குத் தெரிந்ததே. இத்திட்டத்தின் பல்வேறு தொழில் நுட்பக் கூறுகள் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளன. அதனை மிக விரைவில் முடிப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறதென இம்மன்றத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1959-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் உதகமண்டலத்திற்கு ஒரு வடிகால் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 2,50,000 ஆகும். இத்திட்டம் 1967ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் முடிக்கப்பட்டது. செப்டம்பர் 14-ம் தேதியன்று திட்டம் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டது. மற்ற இடங்களுக்கு இத்திட்டத்தை விஸ்தரிப் பதற்கான ஆய்வு வேலை நடைபெற்று வருகிறது.

DR. H. V. HANDE: I am very happy to hear these things. Will the Hon. Minister be able to tell us whether the tourists who will be coming from the next month onwards will be getting enough water and what the source of water supply is?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Collector has been asked to take proper action.

(x) திருச்சி நகரில் காலரா பரவுதல்

திரு. எம். பூபதி: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கிய மான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட திருச்சி நகரில் வாழும் மக்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் கொடிய நோயான காலராவால் பாதிக்கப்பட்டதால் பலர் இறந்து விட்ட விஷயம்".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதி, காலரா பரவலாக ஏற்படும் பகுதியாகும். இப்பகுதியில் நீர் வழங்குவதற்கான வசதி இருந்த போதிலும், அநேகமாக ஒவ்வோர் ஆண்டு முதல் மூன்று திங்களில் இப்பகுதியில் காலரா பரவுகிறது.

திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதியில் காலரா பரவியிருப் பதாக இந்த ஆண்டு 22—4—1968-ம் தேதியன்று ஐயுறவு ஏற்பட்டது. அது முதற்கொண்டு 16—3—1968 தேதி வரை 263 பேருக்கு காலரா கண்டதாகவும், இதில் 18 பேர் மாண்டதாகவும் தெரிகிறது. குடிசைப் பகுதிகளிலும் வாழ்க்கைத்தரம் குறைந்த ஏனைய பகுதிகளிலிருந்துதான் பெரும்பாலும் காலரா கண்டிருப் பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 16—3—1968 தேதி வரை காலர தடுப்பு ஊசிகள் 1,57,440 பேருக்குப் போடப்பட்டுள்ளன. இப்பணி மேலும் நிறைவேறி வருகிறது. இவ்வாறு காலரா ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் சுகாதாரப் பணி—குடும்ப நலத்திட்ட கூடுதல் இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதார ஆராய்ச்சி அதிகாரி நிலைமையைச் சரிவரக் கண்டறிவதற்காக 1968 பிப்ரவரி முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டார். அதன் பின்னர் பொதுச்சுகாதார உதவி இயக்குநரும் (S.E.D.) திருச்சிராப் பள்ளிக்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டார். காலரா தடுப்பு ஏற்பாடுகளும், கட்டுப்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்காக, நகராட்சிச் சுகாதார அதிகாரிக்கும், ஏனைய பொதுச்சுகாதாரப் பணியாளருக்கும் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். சூழ்நிலைச் சுகாதாரம் தரம் குறைந்துள்ள பகுதி களில் சிறப்பாக நாட்டம் செலுத்துமாறும் உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டன. உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும்,